**காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்திட்டம் (CRIWMP) - 2023**

---

காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் (CRIWMP) 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு பசுமை காலநிலை நிதியத்திற்கும் (GCF) ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கும் (UNDP) இடையில் கைச்சாத்திட்ட 2016 ஆகஸ்ட் 05 ஆம் திகதிய அங்கீகார பிரதான உடன்படிக்கையின் 17.01 (ஆ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளுதம் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், நீர்ப்பாசன அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கமநல அபிவிருத்தி திணைக்களம், விவசாயத் திணைக்களம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு என்பன அமுலாக்கல் முகவர்களாக உள்ளன.

காலநிலை மாற்ற இடர் மற்றும் தாக்கங்களுக்கு எதிராக உணவுப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வை பாதுகாப்பதற்கு நீர் முகாமைத்துவத்திற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறை ஊடாக உலர் வலயத்தில் உள்ள சிறு விவசாயிகளின் குறிப்பாக பெண்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கையை மேம்படுத்துதலும் எதிர்கொள்ளும் தன்மையை அதிகரிப்பதற்கு இலங்கை அரசாங்கத்தின் (GOSL's) தொலைநோக்கிற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். உலர் வலயத்தின் மூன்று ஆற்றுப்படுக்கைகளில் கிராமிய நீர்ப்பாசன முறைமையை தரமுயர்த்தி மேம்படுத்துதல் மற்றும் காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் விவசாய நடைமுறைகளினை அளவிடுதல், காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்வதை மேம்படுத்துதல், பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு ஆண்டு முழுவதும் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கு நீர் வழங்கல் மற்றும் முகாமைத்துவ தீர்வுகளை பரவலாக்குதல், நீர் முகாமைத்துவம் மற்றும் சிறு விவசாயிகளின் வறட்சி மற்றும் வெள்ளம் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் ஆகியவற்றிற்கு நீர் முகாமைத்துவம் மற்றும் சிறு விவசாயிகளின் தகவமைப்பு திறனை மேம்படுத்துவதற்கு காலநிலை மற்றும் நீரியல் கண்காணிப்பு மற்றும் முன்னறிவிப்பு முறையை வலுப்படுத்துதல் ஆகிய நான்கு அலகுகளின் கீழ் செயற்திட்டத்தின் பணிகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,521.45 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 52.084 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 5,499.71 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 38.084 மில்லியன் பசுமை காலநிலை நிதியத்தால் (GCF) நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. இலங்கை அரசாங்கத்தினால் ரூபா 2,021.74 மில்லியன் மிகுதி தொகை நிதியிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது

செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூலை மாதத்தில் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 மறுப்பு அபிப்பிராயம்

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

**1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பசுமை காலநிலை நிதியம் ரூபா 8,106 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 34.44 மில்லியனை ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு (UNDP) கடந்த 07 ஆண்டுகளில் வழங்கியிருந்தது. எனினும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,074.30 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 12.99 மில்லியன் மாத்திரம் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சிற்கு (MMDE) வழங்கப்பட்டுள்ளதுடன் செயற்திட்டத்தின் சில நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு UNDP இனால் ரூபா 3,198.12 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 14.91 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், ரூபா 1,618 மில்லியனிற்கு சமமான | FAA செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் NIM (தேசிய அமலாக்க முறை) செயற்திட்டமாக அமுல்ப்படுத்தப்படுவதற்கு நியமிக்கப்பட்டது. எனினும், செயற்திட்டத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நீர்ப்பாசன அமைச்சுக்கும் (முன்னர் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, MMDE என அறியப்பட்டது) UNDP இற்கும் இடையில் ஒரு | நன்கொடை முகவரால் வழங்கப்படும் நிதி மத்திய வங்கியின் ஊடாக அனுப்பப்பட்டு செயற்திட்டத்தின் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் 6.55 மில்லியன் மிகுதி நிதி UNDP ஆல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மொத்த பணவளிப்பின் 38 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நிறைவேற்று நிறுவனத்திற்கு (MMDE) வழங்கப்பட்ட தொகைக்கு மாத்திரமே நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததால் முழு செயற்திட்டத்தின் நிதி செயலாற்றல் மற்றும் நிதி நிலைமை என்பவற்றை பிரதிபலிக்காததுடன் கணக்காய்வு பணி MMDE ஆல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளிற்கு மட்டுப்படுத்தப்பட்டது. | தனியான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. இந்த உடன்படிக்கையின் விதிமுறைகளுக்கு முரணாக, UNDP GCF இடமிருந்து பெறப்பட்ட அனைத்து நிதிகளையும் அரசாங்க திறைசேரிக்கு அனுப்புவதற்குப் பதிலாக அவர்களின் வங்கிக் கணக்கில் வைத்திருக்கிறது. எனவே PMU அதற்கேற்ப நடைமுறையைப் பின்பற்றி, PMU மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஏற்ப வருடாந்த அரச மதிப்பீடுகளில் நிதியேற்பாடுகளை வழங்குமாறு MOI மூலம் அரசாங்க திறைசேரியிடம் கோரியுள்ளது.<br><br>இதன் விளைவாக திறைசேரியிலிருந்து PMU பெற்ற நிதியை மாத்திரமே பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன. எனவே, நிதிக்கூற்றுக்களின் பெறுமதியை திறைசேரியிலிருந்து பெறப்பட்ட தொகையுடன் பொருந்துமாறு அமைச்சின் செயலாளர் சான்றுபடுத்துகிறார், இது CDR இல் அதே அடிப்படையில் பிரதிபலிக்கிறது. | |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான பரீட்சை மீதியில் அடையாளம் காணப்படாத ரூபா 65.99 மில்லியன் கடன் மீதி காட்டப்பட்டிருந்த போதிலும், அத்தகைய மீதி நிதி நிலைமை கூற்றில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | இந்தத் தொகை எமது கணக்கீட்டு முறைமை, குயிக் புக் கணக்கீட்டு பொதி (quick book accounting package) மூலம் செயற்திட்ட பெறுமதியில் சீர்செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கவனத்தில் கொள்வதற்காக கணக்கின் பிரித்தெடுப்பு வழங்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் அனைத்து கொடுக்கல்வாங்கல்களையும் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ரூபா 63.60 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 203,602.80 தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் நிலுவையாக உள்ள முற்பணங்கள் தொடர்பான பொறுப்புக்கள் UNDP வழங்கிய ஒருங்கிணைந்த விநியோக அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. எனினும், அந்த கட்டணங்கள் மற்றும் நிலுவையாக உள்ள முற்பணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் முழு பொறுப்புக்களையும் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட ஆவணத்தின் 7 ஆம் பகுதியின் 69 ஆம் உறுப்புரை | ஒருங்கிணைந்த விநியோக அறிக்கை (CDR) நீர்ப்பாசன அமைச்சின் (அமுலாக்கல் முகவர்) செயலாளரால் அங்கீகரிக்கப்பட வேண்டும். எனினும் 2017 முதல் 2023 வரையிலான காலப்பகுதிக்குள் ஒருங்கிணைந்த விநியோக அறிக்கையை அங்கீகரிக்கும் போது, செயற்திட்ட முகாமைத்துவ அலகு தொடர்பான ஐ.அ.டொலர் 17,657,672.68 தொகையான செலவினத்தை மாத்திரமே செயலாளர் சான்றுபடுத்தியுள்ளார். | கணக்காய்வு அவதானிப்புக்கான பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒருங்கிணைந்த விநியோக அறிக்கை செயலாளரால் அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | FAA இன் நிதியளிப்பு முன்மொழிவின் ஆ பிரிவு | பசுமை காலநிலை நிதியத்திலிருந்து ரூபா 3,074 மில்லியன் (ஐ.அ.டொலர் 12.98 மில்லியன்) மற்றும் GOSL இடமிருந்து ரூபா 2,141.95 மில்லியன் (ஐ.அ.டொலர் 8.84 மில்லியன்) 2023 ஆம் ஆண்டு இறுதி வரை செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுக்கு பெறப்பட்டிருந்தது.<br><br>FAA இன் நிதியளிப்பு முன்மொழிவின் ஆ | கணக்காய்வு அவதானிப்பிற்கான பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியளிப்பு முன்மொழிவின் நிபந்தனைகளின் பிரகாரம் PMU இற்கு பெறப்பட்ட தொகையின் அடிப்படையில் அரசாங்க பங்களிப்பு விடுவிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிரிவின் பிரகாரம், இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு 27 சதவீதமாகவும், GCF இன் பங்களிப்பு செயற்திட்டத்தின் மொத்த பாதீட்டில் 73 சதவீதமாகவும் உள்ளது. செயற்திட்டத்திற்காக GCF இடமிருந்து ரூபா 3,074 மில்லியன் பெறப்பட்டிருந்த போதிலும் அது மொத்த செயற்திட்ட கிரயத்தில் 59 சதவீதம் மாத்திரமே ஆகும். இதன் விளைவாக இலங்கை அரசாங்கம் 2017-2023 காலப்பகுதியில் செயற்திட்டக் கிரயத்தில் 36.6 சதவீதத்திற்கு சமமான ரூபா 1,789 மில்லியனை செலவிட்டிருந்தது. | | |
| (இ) | FAA இன் 2.01 ஆம் உட்பிரிவு | அங்கீகாரம் பெற்ற நிறுவனம் (UNDP) "நிறைவேற்றும் நிறுவனத்தால் நிதியிடப்பட்ட செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவதை கண்காணித்து மேற்பார்வையிடும்." அந்த உட்பிரிவை கருத்தில் கொள்ளாமல், அங்கீகாரம் பெற்ற நிறுவனம் (UNDP) செயற்திட்ட நடவடிக்கைகளின் அமுல்ப்படுத்தலில் ஈடுபட்டு, ரூபா 3,198 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 14.91 மில்லியன் தொகையான மொத்த கிரயத்தில் 51.84 சதவீதத்தை 2017-2023 காலப்பகுதியில் செலவிட்டிருந்தது. | பதில்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. கலந்துரையாடலின் போது கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகள் நிறைவேற்றும் நிறுவனத்தால் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். மேலும் FAA இன் பிரகாரம் அங்கீகாரம் பெற்ற முகவரால் கண்காணிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்பட வேண்டும். |

**3.    பௌதீக செயலாற்றல்**

**3.1    முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டத்தின் நிதி நடவடிக்கை உடன்படிக்கையில் உள்ள 1E மற்றும் 1K கிரய உருப்படிகளில் காட்டப்பட்டுள்ள உருப்படிகளிற்கு முரணாக ரூபா 482,000 கட்டிட வாடகை உபகரணம் மற்றும் தளபாடங்கள் (கணக்கீட்டு குறியீட்டு இல. 72200) கூறு 1 இன் கீழ் செலவிடப்பட்டிருந்தது, | FAA இன் அட்டவணை 2 இல் வழங்கப்பட்டுள்ள பாதீட்டு குறியீடுகள் மற்றும் ஏற்பாடுகளைப் பின்பற்றி, 1E பாதீட்டு விளக்கப்படத்தின் கீழ் குறியீட்டு இலக்கம் 72200 தவிர வாடகைக் கட்டணங்களுக்கு பொருத்தமான பாதீட்டு குறியீடு எதுவும் காணப்படவில்லை. | FAA இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவினங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |